

உ

திருச்சிற்றம்பலம்.

## சிவசுப்பிரமணியர்பேரில்

# பஜனைக் கீர்த்தனம்.

இது

அவிநாசிக்கடுத்த சாவக்கட்டுப்பாளையம்

சுப்பைய செட்டியாரவர்களாலும்

பெருமானல்லூர்க் கணக்கம்பாளையம்

பொ. அப்பைய செட்டியாரவர்களாலு

இயற்றப்பெற்று

பவானி

போர்டு ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர்

கு. குமாரசாமி பிள்ளையவர்களால்

பார்வையிடப்பட்டு

கால்டன் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

1924

Q26:417
N24
181252

உ

சிவமயம்.

வெற்றிவேலுற்றதுணே.

# சிவசுப்பிரமணியர்பேரில் பஜனைக் கீர்த்தனம்.

## விநாயக காப்பு.

### வெண்பா.

சீராருஞ் செந்திற் சிவகுமரன்மேற் றுதிக்
ளோராகச் சொல்ல விசைந்தருளேத்—தாராயென்
றேத்தினேம் வேழமுகத் தெந்தை திருவடிகள்
போற்றினே மன்னுன் புகழ்.

### விநாயகர் துதி.

செந்தில் வாழ்குரு தேசிக வேலர்மேல்
எந்தவேளையும் யாம்துதி செய்திட
சுந்தரியுமை யாள்பெறு தோன்றலாம்
தந்திமாமுகன் றளிணே போற்றுவாம்.

தாளம் ஆதி. பல்லவி. ராகம் நாட்டை.

தந்தையாரை வலமாக வந்துமே கனியை வாங்கும்
தந்திமுக வுன்றனடி சிந்தனே செய்தேன்
தாரகாமா மேருவில் பாரதத்தை வரைந்திடுங் காரணஸ்ரூபா
தண்டாமரைப் பதத்தைக் கொண்டாடுவே நிதமும்
அண்டருனதடியைக் கண்டுதொழுதிடவே
ஆகுவாகன மீதேறி வேகமாய்வாரும் வல்லபை
பாகனே அடியார்தவ யோகனே யெனே
யாண்டருள் வினே மீண்டருள் பாண்டவர் தூதன்
மருகா வேண்டிக்கொண்டேனே பொன்
அம்பலத்தி லாடுகின்ற எம்பெருமான் மகிழ்ந்திடு
தும்பிக்கையா உனதடி நம்பும் சுப்பையனுக்கருள் (தந்)

## சரஸ்வதி துதி.

கருணை நீ புரிந்திடுவாய் கரிமுகனே என்ற மெட்டு.

வாணி நீ வந்தருள்வாய் மதுரகலை
வாணி நீ வந்தருள்வாய் (வா)

வேணுகோபாலன் சேயன் வேதன்னாவிலெந்நாளும்
காணிகொண்டருள்பவளே மதுரகலை (வா)

கம்பருக்கருளிய கமலாசனியே
நம்புமென் னாவிலிருப்பாய் மதுரகலை (வா)

தெள்ளிய தமிழின் சீர் சிறந்திடவே யென்
னுள்ளத்திற் குடிகொள்ளுவாய் மதுரகலை (வா)

வெண்டாமரை மலர் மேவிடுங் கல்யாணி
தொண்டன் சுப்பையன் பணிந்தேன் மதுரகலை (வா)

---

வேலவனே கதிர்வடி வேலவனே என்ற மெட்டு.

பல்லவி.

வந்தருள்வாய் மயின் மீது (வந்)

அநுபல்லவி.

சிந்தாகுலந் தன்னை நீக்கி
சேயனைக்காத்தருள் மாயன் மருகா முருகா (வந்)

சரணம்.

ஆலகாலன் பாலனென்னும் வேலசுரர்
காலாகலாப நீலமயின் மேலேவரும்
ஞாலம் புகழுங் குமரேசா
யேதுமறியாதவன்மேல் வாதுசெய்யாதித்தருணம் (வந்)

ஆறுமுக வாருமினி வேறேகதி
யாருமிலைக்கண் பாருந்திரு வேரகனே
வீரபாகுவை மந்திரியாக வைத்த
விஞ்சைக் கருணாகரவென் சஞ்சலந்தீர்த்திட (வந்)

தஞ்சமெனக் கெஞ்சுமேழை பஞ்சந்தீர்
வஞ்சகமேன் கொஞ்சுங்குற வஞ்சிகேள்வா
அஞ்சாச் சூரர் தன்னைக்கொன்ற
அற்புதவடி வேன் முருகா சுப்பையன் றன்னைக்காத்திட (வ)

ஐயாக்ருபைக் கண்பாரும் என்ற மெட்டு.

பல்லவி.

கந்தா கருணைக் கண்பாரும் கவலைதீரும் (கந்தா)

அனுபல்லவி.

முந்திமூவெயிலெய்த முக்கணனார் செவியில்
மந்திர வுபதேசா வருவாய் குஞ்சரி நேசா (கந்தா)
சூரசங்கார வேலா அனுதினமும்
தொழுதே னுமையருள் பாலா
ஆறுமுக முடையாய் அழகிய வேற்படையாய்
வேறுகதியிங்கிலை வித்தககுகஞான (கந்தா)
தினைப்புனந்தன்னில் சென்று குறமாது தந்த
தேன்மாவை வாங்கித்தின்று
மனமே மருளுதென்று சுனைநீரும் வேண்டுமென்று
வாதாடி வள்ளியை மணம்புரிந்துவந்த (கந்தா)
செந்தூரில் வாழ்முருகா தேவர்கள் போற்றும்
திருவடியது தருவாய்
சந்ததமுந்தனை சிந்தனை செய்திடும்
மைந்தன் சுப்பையனுக்கருள்
வழங்கும் தேசோமயான (கந்தா)

---

மன்றுளாடியவா என்ற மெட்டு.

பல்லவி.

செந்தில் வாழ் குகனே திருச் (செந்)

அனுபல்லவி.

உந்தன் திருவடிபணிந்திடுந்தொண்டரு
ளொருவனு யென்னையுமாண்டருள் (செந்)

சரணம்.

வந்தசூரன் மயில்வடி வாகவே
வாகனமாயேறும் வள்ளி மணாளனே
தந்தையாரீந்திடுங் கனியை வாங்கவென்று
தரணியையொரு நொடிதனிலே
மரகத மயில்மேல் வலம்வரு (செந்)

அந்தரத்தோர்கட் — கிடர் விளைந்ததென்று
ஆதிசத்தியுமையவ — ளிடஞ்சென்று
சுந்தர வேல்கொடு — வென்று வாங்கி அன்று
சூரரின் கிளைகளையெல்லாம் — வேரறும்படி வேல்விட்ட (செங்)
கந்தா கடம்பா — கன்னிவள்ளி லோலனே
கங்கைமதி புனை — சங்கரன் பாலனே
மந்த்ராசலகிரி — வளர்வடி வேலனே
மாதவன் மருகா சுப்பையன் — ஓதிடு செந்தமிழ்க்கருள்செய்(செ)

---

சோக்கலிங்கக்கடவுளே என்ற மெட்டு.

பல்லவி.

பூ மண்டலத்தோர் கொண்டாடுந்
தண்டாயுதன் சந்நிதி தரிசனம்
கண்டாற் கன்ம வினைகள் போமே — ப்ரமாநந்தம்
உண்டாகுமே யிதுமெய்யருளாமே
அறுமாமுகமாகிய வேலா
திருஉமையாள் தந்தருள் பாலா
அன்று தினைப்புனமதனிடை
சென்று வள்ளி தருமாலைவத்
தின்றுபசியாறிய தேசிகனே — தேஜோமயமாகிய
மன்றில் நின்றுடுவோனருள் சுதனே
ஆதாரம் வேறுண்டோநின்
பாதாரமே கண்டேன் முரு
கையா வையாபுரிவாழும்
மெய்யா சுடர்வடிவேலேந்துங் கையா சுப்பைய
னுக்கருள்தாரும் தொண்டர்கள் போற்றி
செய்ய மயிலின்மீதேறி வாரும் — (மண்டலத்தோர்)

---

தேரோட்டந் தைபூசம் என்ற மெட்டு.

பல்லவி.

வாவா கந்தையா என்முன் வாவா கந்தையா என்முன்
வள்ளி மகிழ்ந்திடு புள்ளிமயிலேறி — (வாவா)

அனுபல்லவி.

தேவாதி தேவர் தொழ சிற்றம்பலத்தோன்புகழ
செவியில் மந்திரமோதியவா சாம்
பவிசுதகுக பன்னிருகையுடன் (வாவா)

சரணம் தொகையறு.

பூனையுருக்கொண்ட புரந்தரன் மகள்தனைப்
புணர்ந்திங் கடம்பதேகா
ஆனைமாமுகனுக் கிளையவாசூரர் குலாந்தகா
விண்வேந்தயோகா

பாட்டு.

அந்தரத்தோர் சிறையை அகற்றியவர் குறையை
அப்பொழுதே தீர்க்கு மெய்ப்பொருளே துதி
செப்பும் சுப்பையன்முன் னிப்பொழுதே ஓடி (வாவா)

---

அநந்தங்கோடி ரிஷிகள் போற்றும் அருணாசலமென்ற மெட்டு.

பல்லவி.

திருவேரக மாமலை மேவிய குருவே ஓம் சரவணபவநின்
திருவடிநாளும் தஞ்சமே கிருபாகடாக்ஷம்
சேயேன்மேலில்லை கொஞ்சமே

அனுபல்லவி சரணம்.

திரிபுரமவையொரு நொடிதனிலெரி செயு
மரனருள் குருபர சரவணபவநின் திருவடிநாளும் தஞ்சமே
சேணுடர்க்கிடர் செய்திடு மசுரர்
வாணுளழித்திடு வடிவேல் முருகனின் திருவடிநாளும் தஞ்சமே
திரைகடலதிலுறுங் கரிவரதனுக்கொரு
மருகனாய் வந்திடுங் குருபரனேயுன் திருவடிநாளும் தஞ்சமே
அறுமாமுகமாகிய வேலா
அமரருக்கிடர்விளை சுரர்காலா
திருவாய் மொழிந்தருள்வள்ளி லோலா
செந்தமிழ் சுப்பையனுக்கருள் சீலா
திங்களணிந்தவன் பாலா சிகிமீதேறும்
தேசிகனேமறைமூலா (திருவேரகமாமலை)

மயிலேறி மாமணியோனே என்ற மெட்டு.

பல்லவி.

திருவேரகமேவிய தேசிகனே
திருவடி பணிந்தேன் தேவியுடைமகனே (திரு)

அநுபல்லவி.

அரனார் விழியில் அவதரித்த சண்முகா
சரணம் அடியனின் தாழ்பணிந்தேன் குகா (திரு)

சரணம்.

வருவாய் குருவாய் வரமது தருவாய்
வள்ளி குஞ்சரிமகிழ் மயிலினில் விரைவாய்
திருமேவிய செந்திநகரினிலுறைவாய் தினந்துதி
சுப்பையன் செந்தமிழ்க்கருள்வாய் (திரு)

---

நோட் ஏகதாளம். இராகம் செஞ்சுருட்டி.

அரனருள் குமரேசா வுனை
அண்டினன் தொண்டர்கள் நேசா நிதம்
அன்புடனே கும்பிடும்வின் னும்பரிடர் துன்பம்விலா
அரக்கர்குல [illegible]காலா மனதிரக்கமில்லாததேன் சீலா
சேவற்கொடிக்கதிபதியே உன்றன்
சேவைதந்தாளுமித்ததியே பன்னிரு
செங்கையில்பொன் கங்கணமுந் தங்கிய வேலாயுதநின்
திருப்பதமறவேனே வினை
பிறப்பொழிகுணவானே
பன்னகசயனன் மருகா கண்
பார்த்தருள்செய் திடுமுருகா பய
பக்தியுடனித்தரையில் நித்தமும் பூசித்திடநின்
பதமலரிணை தருவாய் வேறே
கதியிலையினிவருவாய்
திருப்புகழ்க்குகந்தவனே ஓம்
சிவசரவண பவனே துதி
செப்பிடும் சுப்பையன் முனே
இப்பொழுதேவந்தருள்செய் திருத்தணிக்கந்நாதா
கானில் விருத்தராய் வந்தபோதா

நடராஜ தயாநிதியே என்ற மெட்டு.

பல்லவி.

திருவாவினன் குடியுறை குருபர
தேசிகனடியிணையே சேவித்திடுவோம் (திரு)

அநுபல்லவி.

மறவாமல் வந்தனுதினம் வானோர்
வணங்கிடவே அருள் தினந்தரு குமரன் (திரு)

சரணம்.

மருமாமலர் மதிபுனைவானருள் மைந்தவடிவேலா
திருமால்மருகா வள்ளி மகிழுந் தேவனே குணசீலா
சுரலோகசிகாமணி உனதடி
தொழுதேன் சுப்பையனுக்கருள் (திரு)

---

ருமபஜனகோரியா என்ற மெட்டு.

பல்லவி.

மயிலேறி வாருகனே கலபநீல
மயிலேறி வாருகனே

அநுபல்லவி.

கயிலாயநாதனருள் கந்தாவேலனே யென்று
கருத்தினில் நினைத்திடவே கலபநீல (மயிலேறி)

சரணம்.

அந்தரத்தோர்பணியும் செந்தாமரைப்பாதனே
அடியன் படுந்துயர்தீர கலபநீல (மயிலேறி)
பூனையுருக்கொண்டு போனவன் மகள்தனைப்
புணர்ந்திடும் சண்முகனே கலபநீல (மயிலேறி)
சூரர்குலகாலனே சுந்தரியாள் பாலனே
சுப்பையன் றன்னைக்காத்திட கலபநீல (மயிலேறி)

---

அடதாளம். இராகம் பியாகு.

பல்லவி.

அமராவதி காவலனுகிய
ஆறுமுகாவினை தீருங்குகா சூர
சமராடிய வேன்முருகா தமியேனைக்கா திருமால்மருகா

கொஞ்சுங்கிளி வள்ளி ரஞ்சிதனே உனைக்
கொண்டாடினேனருள்
தண்டாயுதா

பஞ்சைபடுந்துயர்
கொஞ்சமோ ஐயனே
சஞ்சலம் தீர்த்திடும் விஞ்சைக்கருணகா (அமரா)

திருமலியுஞ்செந்தி மாநகரந்தனில்
தேவர்கள் போற்றிட மேவியவா
குருவாயரனுர்குப தேசஞ்செய் குகனே திருவுமையாள்
மகனே தேவர்கள் வாழும் (அமரா)

சூரர்குலந்தன்னை வேரறுக்கவந்த
சுப்ரமண்யா ஞான கற்பகமே
வேறுதுணையில்லை நீ யிதுவேளை
வாரும் சுப்பையனுக்கருள் தாரும் குமாரகுரு (அமரா)

---

## மஹாவிஷ்ணு துதி.

### பல்லவி.

வரமருள் சுகுண ஸ்ரீ ஹரிராம
வாரும் வெங்கட்டரமண (வர)

### அனுபல்லவி.

சரர்முனிவோர் போற்றும் தாய்மலரடியிணை
தருவாயிது சமயம் தாமோதர ஸ்ரீராம (வர)
குருவே பாண்டவர்கள் குறை தீர்த்த கோவிந்தா
வருவாயிதுசமயம் வாமன முகுந்தா (வர)
திருமருவுங்கணக்க நகர் பஜனைக்கோவிலில்
மருவுங்கரிவரத மாதவா வந்தருள் (வர)

---

## குப்பண பிள்ளையவர்கள் பாடிய மங்களம்.

### நீநாமரூபமுலகு என்ற மெட்டு.

செந்தூர்வாழ் கந்தாவுன்றன் சேவடிக்கு மங்களம் (திருச்)
இந்த்ராதி தேவரெல்லாம் வந்து நிதம்துதிசெயும் (செந)
அம்பிகைதரு பாலா நம்பினோர்க்கருள்சீலா (திருச்)
குன்றுளுறை குமா[illegible]வே மன்றுளோனருள்பரமா (செந்)